# காலை

இந்த இளங்காலைத் தென்றலிலே நான்
சுகமாய் சுகமாய்க் கரைந்து போக;

சின்னப் பூங்குயில் வாய்க் குழலோசையில் நான்
இதமாய் இதமாய்க் கலந்து போக;

பசும்புல் நுனியில் கோர்த்து நிற்கும் பனிமுத்தாய் நான்
ஊஞ்சலாடி ஊஞ்சலாடி உதிர்ந்து போக;

தேன் சொட்டும் பன்னீர்ப் பூக்களின் நறுமணமாய் நான்
தத்தித் தத்தித் தவழ்ந்து போக;

அந்த வெண் பஞ்சு மேகக் கூட்டத்துடன் நான்
இணையாய் இணையாய் மிதந்து போக;

உதயமாகும் கதிரவனின் பொன்கதிர் வீச்சில் நான்
நாளும் கிழமையும் மறந்து போக...

அ. சொ
பெங்களூர்
ஜூலை 2006.